# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2445 - 2025 ජූලි මස 11 වැනි සිකුරාදා - 2025.07.11

2445 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 624 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, ஒகத்து மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, யூலை மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

623 – B82700 - 5403 (2025/07)

# பதவிகள் - வெற்றிடம்

## மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் விடய நிபுணர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் விடய நிபுணர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக தற்போது அரசாங்க சேவையில் மற்றும் மாகாண அரசாங்க சேவையில் பணிபுரியும் இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தரம் I ஐச் சேர்ந்த தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள்**

I. இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் தரம் I இல் குறைந்தது 05 வருட உயிர்ப்பான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்கும் உத்தியோகத்தராக இருத்தல்.

II. தற்போது அரசாங்க சேவை / மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுவதால் வயது எல்லை ஏற்புடையதன்று.

III. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

IV. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 01/2020 மற்றும் 01/2020(I) ஆம் இலக்க சுற்றறிக்கைகளில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்று தண்டனைகளுக்கு உட்படாதிருத்தல்

02. **ஆட்சேர்ப்புமுறை**

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தரம் I ஐச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுள், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றினால் நடாத்தப்படும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய, அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் இவ்வெற்றிடப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்.

(அங்கீகரிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கும் திட்டம் www.psc.cp.gov,lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

*குறிப்பு* - தகைமைகளை உறுதிப்படுத்தும் அனைத்து சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன், தேசிய ஆளடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

03. **விண்ணப்பிக்கும் முறை**

- முறையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர் மற்றும் உரிய அமைச்சின் செயலாளரினூடாக (மாகாண சபைக்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தராயின் தனது விண்ணப்பத்தை மாகாண அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதான செயலாளர் ஆகியோரின் விதந்துரையுடன்) "செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல. 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி" என்ற முகவரிக்கு 2025.08.01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

- விண்ணப்பத்தினை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் விடய நிபுணர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்" எனத் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

- விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் மற்றும் பூரணமின்றியும் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

- தாமதமாக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் தொலைந்த விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகளை மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு பொறுப்பேற்க மாட்டாது.

(மாதிரி விண்ணப்பப்படிவத்தை www.psc.cp.gov,lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.)

04. இவ் ஆட்சேர்ப்பு சம்பந்தமாக இங்கு குறிப்பிடாத ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சார்ந்ததாகும்.

05. இதன் சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கில மொழிகளிலுள்ள அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

சுஜானி ஆர். விஜேதுங்க,
செயலாளர் (பதில்),
மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
2025, யூலை 04.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின்**
**விடய நிபுணர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி : ..........................................................................
2. I. தற்போது வகிக்கும் பதவி :..........................................................................................
   II. சேவை மற்றும் தரம் : ..........................................................................................
   III. தற்போதைய சேவை நிலையமும் முகவரியும் :..........................................................................
   ..........................................................................................
3. சுய முகவரி : ..........................................................................................
4. பால் : ..........................................................................................
5. I. பிறந்த திகதி :..........................................................................
   II. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :..........................................................................
6. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ..........................................................................
7. தொலைபேசி இலக்கம் I. பிரத்தியேக : ..........................................................................
   II. உத்தியோகபூர்வ : ..........................................................................
8. இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தரம் I இற்கு பதவியுயர்வு பெற்ற திகதி : ..............................
9. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு தரம் I இல் முனைப்பான சேவைக்காலம் :
   வருடங்கள் : .............................. மாதங்கள் : .......................................... நாட்கள் :.......................................

10. பதவியுடன் தொடர்புடைய துறைசார் கல்வித் தகைமைகள் :

| *தொடர். இல.* | *பட்டப்பின் பட்டம்/ பட்டப்பின் டிப்ளோமா* | *வழங்கிய நிறுவனம்* | *வருடம்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

11. அரசாங்க சேவையில் முதல் நியமனம் முதல் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி வரையிலான சேவைக் கால விபரங்கள் :

| *தொடர் இல.* | *நிறுவனம்* | *வகித்த பதவி மற்றும் அப்பதவிக்குரிய தரம்* | *காலம்* | |
|---|---|---|---|---|
| | | | *முதல்* | *வரை* |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

12. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார துறையில் காட்டியுள்ள “திறமைகள்” பற்றிய விபரங்கள்

I. வருடாந்த செயலாற்றுகை மதிப்பீடுகள்
நேர்முகப்பரீட்சை நடக்கும் திகதிக்கு உடன் முந்திய 05 வருட காலத்தில் பெற்றுள்ள செயலாற்றுகை மட்டம் தொடர்பான விபரங்கள் (பொருத்தமற்ற சொற்களை வெட்டிவிடவும்)

| *ஆண்டு* | *பெற்றுள்ள செயலாற்றுகை மட்டம்* |
|---|---|
| 2020 | மிகவும் சிறந்தது / சராசரியிலும் கூடியது/ திருப்திகரமானது |
| 2021 | மிகவும் சிறந்தது / சராசரியிலும் கூடியது/ திருப்திகரமானது |
| 2022 | மிகவும் சிறந்தது / சராசரியிலும் கூடியது/ திருப்திகரமானது |
| 2023 | மிகவும் சிறந்தது / சராசரியிலும் கூடியது/ திருப்திகரமானது |
| 2024 | மிகவும் சிறந்தது / சராசரியிலும் கூடியது/ திருப்திகரமானது |

II. விடயம் சார் அறிவு / அனுபவம்
(இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள புள்ளி வழங்கள் திட்டத்தின் 02.3.1 இன் அடிப்படையில்)

| *தொடர். இல.* | *விடயம் சார் அறிவு / அனுபவம்* | *கால வரையறை* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

III. நிதி முகாமைத்துவம் மற்றும் நிருவாக விடயங்கள் தொடர்பான அறிவு / அனுபவம்
(இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள புள்ளி வழங்கள் திட்டத்தின் 02.3.2 இன் அடிப்படையில்)

| *தொடர். இல* | *நிதி முகாமைத்துவம் மற்றும் நிருவாக விடயங்கள் தொடர்பான அறிவு / அனுபவம்* | *கால வரையறை* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

IV. படைப்பாற்றல் மிக்க வெளியீடுகள் மற்றும் கருத்திட்டங்கள்
(இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள புள்ளி வழங்கள் திட்டத்தின் 02.4 இன் அடிப்படையில்)

| *வெளியீடுகள் மற்றும் கருத்திட்டங்கள்* | *உரிய பிரிவு* |
|---|---|
| | |

V. ஏனைய தகைமைகள்

i. பெற்றுள்ள பாராட்டுக்கள் (Commendations)
("பொது 230 ஆ" மாதிரிப்படிவத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பாராட்டுக்களுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்)

| *தொடர். இல* | *பெறப்பட்டுள்ள பாராட்டுக்கள்* | *பாராட்டு பெறப்பட்டது* | | *துறைசார் எவ்விடயம் காரணமாக இப்பாராட்டு பெறப்பட்டது* |
|---|---|---|---|---|
| | | *யாரிடமிருந்து* | *வருடம்* | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

ii. மாகாண / தேசிய மட்ட விருதுகள்
(இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள புள்ளி வழங்கள் திட்டத்தின் 02.5.1 இல் குறிப்பிட்டுள்ளவாறு)

| *தொடர். இல* | *வெற்றிகள் தொடர்பான விபரங்கள் (எவ்விடயம் தொடர்பில்)* | *மாகாண / தேசிய / சர்வதேச ரீதியில் பெறப்பட்ட வெற்றிகள் தொடர்பில்* | *வழங்கிய நிறுவனம்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிப்படுத்துவதுடன், எனக்கெதிராக எவ்வித தற்போது ஒழுக்காற்று நடவடிக்கைகள் இல்லையெனவும், விண்ணப்பப்படிவம் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 05 வருடகாலப்பகுதியில் தாபனக் கோவையின் தொகுதி II இன் அட்டவணை I அல்லது II இல் குறிப்பிட்டுள்ள தவறுகள், தண்டனைகளுக்கு ஆளாகவில்லையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : ………………………………

………………………………………………
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திணைக்களத் தலைவரின் பரிந்துரை

திரு. / திருமதி / செல்வி………………………………………………………………………………… ஆல் வழங்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள தகவல்கள் அவரது ஆள்சார்புக் கோவையுடன் பரீட்சிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட்டதுடன், அவர் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 05 வருடத்தினுள் பெற வேண்டிய அனைத்து சம்பள ஏற்றங்களையும் ஈட்டியுள்ளார் எனவும், அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 மற்றும் 01/2020(I) இன் ஏற்புகளுக்கமைய, இவ்வலுவலருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று தண்டனைகள் இல்லை எனவும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும், எதிர் காலத்தில் அத்தகைய ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசிக்கவில்லை எனவும் சான்று பகர்கிறேன். இப்பதவிக்குதெரிவு செய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க இணங்குகிறேன்.

திகதி :………………………………

……………………………………………
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
பெயர்
உத்தியோகபூர்வ முத்திரை

---

அமைச்சின் செயலாளரின் பரிந்துரை

உரிய விண்ணப்பப்படிவத்தினை நான் பரிந்துரைக்கின்றேன்/ பரிந்துரைக்கவில்லை

திகதி : ………………………………

……………………………………………
அமைச்சுச் செயலாளரின் கையொப்பம்
பெயர்
உத்தியோகபூர்வ பதவி முத்திரை.

---

மாகாண பிரதான செயலாளரின் பரிந்துரை : (மாகாண சபைக்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்களுக்கு மாத்திரம்)

உரிய விண்ணப்பப்படிவத்தினை நான் பரிந்துரைக்கின்றேன்/ பரிந்துரைக்கவில்லை

திகதி : ………………………………

……………………………………
மாகாண பிரதான செயலாளரின் கையொப்பம்
பெயர் :
உத்தியோகபூர்வ பதவி முத்திரை

07- 665